# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.84** **நாள் : 27.06.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக 15 நாட்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் இரவு களப்பணி மூலம் இதுநாள்வரை 425 வீடற்ற நபர்கள் கண்டறியப்பட்டு காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

=====

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் சென்னை மாநகரத்தில் நகர்ப்புற வீடற்றோருக்கான காப்பகங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் ஏற்படுத்த வேண்டும் என்ற வழிகாட்டுதலின் படி இதுவரை சென்னையில் 4 சிறுமியர்கள் காப்பகங்கள், 5 சிறுவர்கள் காப்பகங்கள், 1 அறிவுதிறன் குறைவுள்ள சிறுவர்கள் காப்பகம், 8 பெண்கள் காப்பகங்கள், 12 ஆண்கள் காப்பகங்கள், 2 முதியோர் காப்பகங்கள், 1 ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கான காப்பகம், 1 மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் காப்பகம், 2 மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் காப்பகங்கள், 1 மாற்றுத்திறனாளி பெண்கள் காப்பகம் மற்றும் 1 திருநங்கைகளுக்கான காப்பகம் என மொத்தம் 38 நகர்ப்புற வீட்டற்றோர்க்கான காப்பகங்களும், 7 பெண்களுக்கான சிறப்பு காப்பகங்கள் மற்றும் 6 ஆண்களுக்கான சிறப்பு காப்பகங்கள் என மொத்தம் 13 சிறப்பு காப்பகங்கள் (மருத்துவமனைகளில்) தற்போது செயல்பட்டு வருகிறது.

தெருவோர வீடற்ற ஆண்கள், பெண்கள், முதியோர்கள், திருநங்கைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான தங்குமிடம், உணவு, மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற வசதிகளை செய்து தருதல், தெருவோர சிறார்களுக்கு தங்குமிடம் அளித்து, அங்கிருந்து பள்ளி சென்றுவர ஏற்பாடு செய்தல், அறிவுத்திறன் குறையுள்ள சிறார்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கு காலவரையறை நிர்ணயம் செய்தல், அடையாள அட்டைகள் வழங்குதல் (வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, முதியோர் ஓய்வூதியம்), திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், பிரிந்தவர்களை குடும்பத்தினரோடு சேர்த்து வைத்தல் போன்ற உதவிகளை செய்து பெருநகர சென்னை மாநகராட்சி தெருக்களில் வீடற்றோர் யாருமில்லை என்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகியவை இந்த காப்பகங்களின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதாரத்துறையின் சார்பில் நகர்ப்புற வீடற்றோர்கள் (ஆண்கள், பெண்கள், முதியோர்கள், திருநங்கைகள், குழந்தைகள்) மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டு தெருக்களில் ஆபத்தான சூழலில் சுற்றித்திரியும் நபர்களை மீட்டு மாநகராட்சி காப்பகங்களில் அனுமதிக்க 05.12.2018 முதல் சிறப்பு மீட்பு இரவு களப்பணி 15 நாட்களுக்கு ஒரு முறை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 25.06.2019 அன்று இரவு 7 மணி முதல் 12 மணி வரை மயிலாப்பூர் மற்றும் கோயம்பேடு பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் காப்பக ஒருங்கிணைப்பாளர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து, இரவு களப்பணி மேற்கொண்டனர். இந்தக் களப்பணியின் மூலம் 60 ஆண்கள், 5 பெண்கள், 1 பெண் குழந்தை மற்றும் 3 மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என மொத்தம் 69 நபர்கள் கண்டறியப்பட்டு மாநகராட்சி காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 05.12.2018 அன்று முதல் 07.06.2019 அன்று வரை நடைபெற்ற இரவு களப்பணி மூலமாக 356 நபர்கள் மீட்கப்பட்டு மாநகராட்சி காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**